**ஜூலை – 05**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் (IPRC), அரை-குளிர்நிலை இயந்திரத்தின் ஆற்றல் பகுதி சோதனை மாதிரிகளின் (PHTA) 175 டன் வெப்பச் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக நடத்தியது.
- தனது 90வது ஆண்டு விழா மற்றும் இந்தியாவில் வானொலி ஒலிபரப்பின் வரவிருக்கும் 100 ஆண்டுகளை (2027) குறிக்கும் வகையில், 'ஸ்வர் பிரேர்ணா வீதிகா' (Swar Prerna Veethika) என்ற நிரந்தர புகைப்படக் கண்காட்சியை ஆகாஷ்வாணி திறந்துள்ளது.
    - 1936 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் பொது சேவை ஒளிபரப்பாளராக செயல் பட்டு வருகின்ற ஆகாஷ்வாணி செவ்வியல், நாட்டுப்புற, பக்தி மற்றும் பிராந்திய இசைக்கு ஒரு தளத்தை வழங்குகிறது.
- கோவாவில் உள்ள கோவா ஷிப்யார்ட் லிமிடெட்டில் (GSL), புதிய தலைமுறை விரைவு ரோந்துக் கப்பலான (FPV) ICGS அக்சய், இந்திய கடலோரக் காவல்படையில் (பாரதிய தத்ரக்சக்) இணைக்கப்பட்டது.
- மகாராஷ்டிராவில் இந்தியாவின் முதல் கடல்சார் விமான நிலையத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
    - மும்பை பெருநகரப் பகுதிக்கான (MMR) மூன்றாவது சர்வதேச விமான நிலையமாக செயல்படும் இந்த விமான நிலையம் பால்கர் மாவட்டத்தில் உள்ள கோர் கடற்கரைக்கு அருகே திட்டமிடப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சீஷெல்ஸில் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை (UPI) அறிமுகப்படுத்துவதற்காக இந்தியாவும் சீஷெல்ஸும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன.
- குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவதற்காக ராஜஸ்தான் மற்றும் ஹரியானா மாநிலங்கள் யமுனை நதிநீர் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
    - மேல் யமுனைப் படுகையின் பயன்படுத்தக்கூடிய மேற்பரப்பு நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்த 1994 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் அமைந்துள்ளது.
- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் நெகிழிப் பைகளைக் குறைப்பது மற்றும் துணி, சணல், காகிதப் பைகள் போன்ற மீண்டும் பயன்படுத்தக் கூடிய மாற்றுப் பொருட்களை ஊக்குவிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 3 அன்று சர்வதேச நெகிழிப் பை இல்லாத தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Breaking Free from Single-Use Plastics: Towards a Sustainable Future என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தாயுமானவர் திட்ட விரிவாக்கம்

- முதியோர்கள், விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அதிக அளவில் பயன்பெறும் வகையில், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- பொது விநியோகத் திட்ட (PDS) நியாயவிலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியப்


பொருட்களை வீடுகளுக்கே சென்று வழங்கும் வசதியை இத்திட்டம் வழங்குகிறது.

- இத்திட்டத்திற்கான தகுதி வயதை 70-லிருந்து 60 ஆகக் குறைக்க அரசு திட்டமிட்டு உள்ளது.
- இந்த விரிவாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கூடுதலாக சுமார் 4 லட்சம் பயனாளிகள் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தற்போது, சுமார் 20 லட்சம் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 34,000-க்கும் மேற்பட்ட பொது விநியோகத் திட்ட (PDS) கடைகள் மூலம் ரேஷன் பொருட்களை தங்கள் வீடுகளிலேயே பெறுகின்றனர்.




## தேசியச் செய்திகள்

### தேசிய டிஜிட்டல் தளம் – DIKSHA




- பள்ளிக் கல்விக்கான "ஒரே நாடு, ஒரே டிஜிட்டல் தளம்" என DIKSHA (அறிவுப் பகிர்வுக்கான டிஜிட்டல் உள்கட்டமைப்பு) தளத்தை மத்திய அரசு நியமித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தீக்ஷா தளமானது, மத்திய கல்வித் தொழில்நுட்ப நிறுவனத்தின் (CIET) ஆதரவுடன் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (NCERT) நிர்வகிக்கப்படுகிறது.
- இது அடித்தள நிலை முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடத்திட்டம் சார்ந்த டிஜிட்டல் கற்றல் வளங்களை வழங்குகிறது. மேலும் இது கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள கல்வி வாரியங்களால் பயன்படுத்தப் படுகிறது.

- இது NISHTHA (பள்ளித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான முன்னேற்றத்திற்கான தேசிய முன்னெடுப்பு) திட்டத்தின் மூலம் ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கு ஆதரவளிக்கிறது மற்றும் சுய-கற்றல் சான்றிதழ் படிப்புகளையும் வழங்குகிறது.
- மாற்றுத்திறனாளி கற்பவர்களுக்கு அணுகலை மேம்படுத்தும் வகையில், நேரடி வசதி, தரவிறக்கம் செய்யக் கூடிய உள்ளடக்கம், DAISY-வடிவப் பொருட்கள் மற்றும் உரையிலிருந்து - பேச்சு போன்ற அம்சங்களையும் DIKSHA வழங்குகிறது.

## முக்கிய மூலதன விரிவாக்கம் - NIIF

- தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்தில் (NIIF) கூடுதலாக ₹30,000 கோடி முதலீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம் இந்திய அரசின் மொத்த முதலீட்டுத் தொகை ₹60,000 கோடியாக உயர்ந்து உள்ளது.
- தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியம் (NIIF) என்பது இந்தியாவின் இறையாண்மை ஆதரவுடனான முதலீட்டுத் தளமாகும் என்ற நிலையில் இதில் அரசு 49% பங்குகளைக் கொண்டுள்ளது.
- இந்த முதலீடு, ₹30,000 கோடி இலக்கு நிதியைக் கொண்ட NIIF உள்கட்டமைப்பு நிதியம் II-க்கு ஆதரவளிக்கும்.
- இந்த நிதியம் போக்குவரத்து, எரிசக்தி, டிஜிட்டல் உள்கட்டமைப்பு, நகர்ப்புற உள் கட்டமைப்பு மற்றும் மின்னணு-இயக்கத் திறன் ஆகிய துறைகளில் முதலீடு செய்யும்.




## SUMAN செயல்வரைபடம் 2030

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல சபையின் 16வது மாநாட்டில் 'சுமன் செயல்வரைபடம் 2030' வெளியிடப் பட்டது.
- சுமன் செயல்வரைபடம் 2030 என்பது இந்தியாவில் தாய் மற்றும் பச்சிளம்

குழந்தைகளின் சுகாதாரப் பராமரிப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு உத்திசார் கட்டமைப்பாகும்.

- இது RMNCHA+N (இனப்பெருக்க, தாய், பச்சிளம் குழந்தை, குழந்தை, வளரிளம் பருவத்தினர் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து) அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் தாய்மார் இறப்பு விகிதத்தை (MMR) 1 லட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 70-க்குக் கீழ் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (NMR) மற்றும் குழந்தை இறப்பு விகிதம் (IMR) ஆகியவற்றைக் குறைப்பதையும் இது இலக்காகக் கொண்டுள்ளது.
- இது இலக்கு அடிப்படையிலான தலையீடுகளுக்காக 13 அதிகக் கவனம் செலுத்தப் படும் மாநிலங்களில் உள்ள 130 மாவட்டங்களை உள்ளடக்கியது.
- இதில் டிஜிட்டல் கண்காணிப்பு, அவசர மகப்பேறு பராமரிப்பு மற்றும் அதிக ஆபத்து உள்ள கர்ப்பங்களைக் கண்காணிப்பது ஆகியவை அடங்கும்.




## ஒருங்கிணைந்த குழந்தை சுகாதாரத் திட்டம் - SSBSK

- வீடு சார்ந்த ஒருங்கிணைந்த பராமரிப்பு மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு மூலம் பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தைகள் சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் சமக்ர சிசு பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் (SSBSK) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- SSBSK திட்டமானது 'வீடு சார்ந்த பச்சிளம் குழந்தை பராமரிப்பு' (HBNC) மற்றும் 'வீடு சார்ந்த சிறு குழந்தை பராமரிப்பு' (HBYC) ஆகியவற்றை ஒரே திட்டமாக ஒருங்கிணைக்கிறது.

- இது 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கான அபாய அடிப்படையிலான வீடுகளுக்கே சென்று பார்வையிடும் திட்டத்தை வழங்குவதுடன் குறைப் பிரசவம் மற்றும் குறைவான எடை கொண்ட குழந்தைகளுக்கு கூடுதல் முறை பார்வையிடும் வசதியும் இதில் அடங்கும்.
- அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார ஆர்வலர்கள் (ASHA), துணை செவிலியர் மருத்துவச்சிகள் (ANM), சமூக சுகாதார அலுவலர்கள் (CHO) மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் போன்ற முன்களப் பணியாளர்கள் இத்திட்டத்தைச் செயல் படுத்துகின்றனர்.
- இதில் தாய்மார்களின் மனநலப் பரிசோதனை, வளர்ச்சிக் கண்காணிப்பு, நோய்த் தடுப்பு ஆதரவு மற்றும் குழந்தைப் பருவத்தின் ஆரம்பகால வளர்ச்சி நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.





## இந்தியாவின் அணு ஆயுதங்கள் நிலை நிறுத்தம்

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) 2026 ஆம் ஆண்டிற்கான அறிக்கையானது, இந்தியாவின் மதிப்பிடப்பட்ட 190 அணு ஆயுதங்களில் 12 ஆயுதங்களை "செயல்பாட்டு ரீதியாக நிலை நிறுத்தப்பட்டவை" என வகைப்படுத்தியுள்ளதுடன் இந்தியாவின் அணு ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு சிறிய பகுதி அதிக தயார் நிலையில் இருப்பதைக் குறிக்கிறது.
- 12 இந்திய அணு ஆயுதங்கள் தற்போது ஏவுகணை அமைப்புகளுடன் "செயல்பாட்டு ரீதியாக நிலை நிறுத்தப்பட்டுள்ளன" என்றும் அவை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும் SIPRI தெரிவித்துள்ளது.
- இது இந்தியாவின் "No First Use" (NFU) என்ற அணுசக்தி கோட்பாட்டிலோ அல்லது நம்பகமான குறைந்தபட்ச தடுப்புக் கொள்கையிலோ எந்த மாற்றத்தையும் குறிக்கவில்லை.
- செயல்பாட்டு ரீதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பது ஏவுகணைகள் அல்லது நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்ற அமைப்புகளுடன் ஆயுதங்கள் பொருத்தப்பட்டு தயார்


நிலையில் வைக்கப்பட்டுள்ளதைக் குறிக்கிறது.

- இந்த முன்னேற்றமானது, இந்தியாவின் அணுசக்தி முக்கோணத்தை, குறிப்பாக அரிஹந்த் வகுப்பு அணுசக்தி உந்துவிசை எறிகணை நீர்மூழ்கிக் கப்பல்களை (SSBN) வலுப்படுத்துவதோடு தொடர்புடையதாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## நிதியாண்டு 2026-இல் (FY26) இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்




- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) 2026 ஆம் நிதியாண்டுத் தரவுகளின்படி, இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் $762.8 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன் மொத்த உள்நாட்டு

உற்பத்தியில் கடனின் விகிதம் 20.8% ஆக அதிகரித்துள்ளது.

- நிதியாண்டு FY26-இல் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் $762.8 பில்லியனாக உள்ளது, இது நிதியாண்டு FY25 உடன் ஒப்பிடுகையில் $26.3 பில்லியன் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- இதே காலக்கட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் விகிதம் 19.8% இலிருந்து 20.8% ஆக உயர்ந்துள்ளது.
- வெளிநாட்டுக் கடனில் அரசு, வங்கிகள் மற்றும் தனியார் துறை ஆகியவை வெளி நாட்டு மூலங்களிலிருந்து பெறும் கடன்கள் அடங்கும்.
- வெளிநாட்டுக் கடன்கள் அதிக அளவில் வாங்கப்பட்டதாலும், உலகளாவிய நாணய மதிப்பீட்டு விளைவுகளாலும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## டெல்லி மின்சார வாகன (EV) கொள்கை 2026




- மின்சார இயக்கத்தை ஊக்குவிப்பதற்கும் வாகன உமிழ்வைக் குறைப்பதற்கும் டெல்லி அரசு டெல்லி மின்சார வாகனக் கொள்கை 2.0-ஐ அறிவித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டு மார்ச் 31-க்குள் டெல்லியின் மொத்த வாகனங்களில் 30% மின்மயமாக்கலை அடைவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2027 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல், டெல்லியில் மின்சார மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் N1 வகை சரக்கு வாகனங்கள் மட்டுமே பதிவு செய்யப்படும்.
- 2028 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல், மின்சார இருசக்கர வாகனங்கள் மட்டுமே புதிய பதிவுக்கு தகுதி பெறும்.
- ஏற்கனவே உள்ள புதைபடிவ எரிபொருள் வாகனங்கள் அவற்றின் ஆயுட்காலத்தை முடிக்க அனுமதிக்கப்படும்.
- இந்தக் கொள்கையானது சலுகைகள், பழைய வாகனங்களை அழிப்பதற்கான

நன்மைகள் மற்றும் மின்னேற்ற உள்கட்டமைப்பு விரிவாக்கம் ஆகியவற்றை வழங்குகிறது.

- இது கலப்பின வாகனங்களுக்கு மானியங்களை விலக்கி, தூய மின்சார வாகனங்களில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகளாவிய திறன் சவால் 2026

- ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய திறன் சவாலில் இந்தியா ஐந்து பதக்கங்களை (3 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம்) வென்றுள்ளது.
- இந்த நிகழ்வானது சீனா, ஷாங்காயில் திட்டமிடப்பட்டுள்ள 48-வது உலகத் திறன் போட்டிக்கான (2026) ஒரு ஆயத்தப் போட்டியாகும்.
- உலகத்திறன் இயக்கத்தின் கீழ் 16 உலகத்திறன் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த சுமார் 600 போட்டியாளர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.
- சேர்க்கை உற்பத்தி, மேகக் கணிமை மற்றும் சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளில் இந்தியா தங்கப் பதக்கங்களை வென்றது.
- 3D டிஜிட்டல் விளையாட்டுக்கான கலைப் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், வண்ணம் தீட்டுதல் மற்றும் அலங்கரித்தல் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வெல்லப்பட்டதுடன் இது திறன் இந்தியா முயற்சிகளின் கீழ் இந்தியாவின் வளர்ந்து வரும் தொழில் திறன் வலிமையை எடுத்துக்காட்டுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★